DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 74/2019

Prosecution witness – PW.10

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.இராஜேந்திரன் | Caste: | |
| Father's Name | :வெள்ளையன் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

19.05.2025 – 05.20 PM

எதிரி ஆஜர் இல்லை. எதிரிக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

<u>குறுக்கு விசாரணை</u>:–

1. கடந்த 2012ம் வருடம் சுகன்யா சேம்பருக்கு எங்கள் ஊரைச் சேர்ந்த 10 குடும்பங்கள் வேலைக்கு சென்றதாகவும், வேலைக்காக எங்கள் ஊரைச் சேர்ந்த கார்த்திக் என்பவர் மேற்படி சேம்பருக்கு அழைத்துச் சென்றதாகவும், அப்போது வேலை ஒழுங்காக செய்யவில்லை என்று எங்களை துன்புறுத்தியதாகவும், காலை 06.00 மணியிலிருந்து இரவு 08.00 மணி வரை வாரத்தில் 6 நாட்கள் வேலை செய்ய கட்டாயப்படுத்துவார்கள் என்றும் அதனால் எங்களால் எங்கும் செல்ல இயலாது என்றும் பிறகு வேலைக்கு அழைத்துச் சென்ற மேஸ்திரியிடம் பிரச்சனை ஏற்பட்டதாகவும், அரசு அதிகாரிகள் வந்து மீட்டுச் சென்றதாகவும், வேலை செய்யும் பணத்தில் மூன்றில் ஒரு பகுதி சம்பளத்தை வாரச் சம்பளமாக கொடுப்பார்கள் என்றும், மீத இரண்டு பகுதி சம்பளத்தை ஏற்கனவே முன்பணமாக பெற்றுக்கொண்ட ரூ.40,000/–பணத்தில் வரவு வைத்துக்கொள்வதாகவும் போலீசார் விசாரணையின் போது நான் கூறியுள்ளேனா என்றால் ஆமாம், கூறினேன். அவ்வாறு கூறவில்லை

என்றால் சரியல்ல.

2. என்னை சேம்பரிலிருந்து எந்த அதிகாரிகள் வந்து அழைத்துச் சென்றார்கள் என்றால் அரசு அதிகாரிகள் மற்றும் போலீசார் வந்தார்கள். அவர்கள் இரவு 08.00 மணிவாக்கில் வந்தார்கள். எந்த போலீசார் என்பதோ எந்த படிநிலையைச் சேர்ந்தவர்கள் என்பதோ, அரசு அதிகாரிகளும் எந்த தரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் எனக்கு தெரியாது. எனக்கு கொத்தடிமை தொழிலாளர் மீட்பு சான்றிதழ் கொடுத்தார்களா என்றால் ஆமாம், கொடுத்தார்கள். அந்த சான்றிதழை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் நகலை நான் வைத்துக் கொண்டு அசலை போலீசாரிடம் கொடுத்தேன். எனக்கு போலீசார் எங்களை மீட்டதற்கு பின்னதாக 6 மாதத்திற்குள்ளதாக சான்றிதழ் கிடைத்தது. 6 மாதத்திற்குள்ளாக என்றால் மீட்டதில் இருந்து எத்தனை மாதம் கழித்து கொடுத்தார்கள் என கூறமுடியுமா என்றால் தோராயமாக 3 மாதம் கழித்து கொடுத்தார்கள்.

3. அப்போது விசாரித்த சமயத்தில் தான் நான் மேற்படி சான்றிதழின் அசலை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஆமாம். அரசாங்கத்திலிருந்து என்னை மீட்ட மறுநாள் வீட்டிற்கு அரசு அதிகாரிகள் வந்து ரூ.1000/-மும், சாப்பாடும் கொடுத்தார்கள். அதன் பிறகு 2, 3 மாதங்கள் கழித்து ரூ.18,000/-கொடுத்தார்கள். இந்த விபரத்தை போலீசார் விசாரணையின் போது கூறினேனா என்றால் இல்லை. எனக்கு தொழிலாளர் துறையிடமிருந்து வேலை வாய்ப்பு ஏதேனும் கிடைக்கப்பெற்றதா என்றால் இல்லை. நான் மீட்கப்பட்டதாக சொல்லப்படுவதற்கு பின்னிட்டு மருத்துவ உதவிகள் ஏதேனும் அரசங்கத்திடமிருந்து அல்லது தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையிடமிருந்து கிடைக்கப்பெறுகிறேனா என்றால் இல்லை.

4. சேம்பரின் உரிமையாளர் யார் என்பதை அறிந்து கொள்ளும்

விதமாக ஏதேனும் ஆவணங்களை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் ஆவணம் இருந்தது. அதை அபிராமம் காவல் ஆய்வாளரிடம் கொடுத்துவிட்டேன். நான் சேம்பரில் வேலை செய்ததாக சொல்வதற்கு ஆவணங்களோ அங்கு முன்பணம் பெற்றதாக சொல்வதற்கு ஆவணங்களோ அதிலிருந்து எனது சம்பளத்தை பிடித்தம் செய்ததாக சொல்வதற்கு ஆவணங்களோ ஒரு நாளைக்கு நான் எவ்வளவு கற்களை அறுத்தேன் என்பதற்கு ஆதரவாக ஆவணங்களோ, ஒரு நாளைக்கு எவ்வளவு கூலி என்பதற்கு ஆதரவாக ஆவணங்களோ ஏதேனும் போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஆமாம், அபிராமம் போலீசாரிடம் ஒப்படைத்தேன்.

5. சுகன்யா சேம்பர் என்ற பெயரில் அபிராமத்தில் எந்த சேம்பரும் இல்லை என்றால் சரியல்ல. அதற்கு மூர்த்தி உரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சுகன்யா சேம்பரில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்./– G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி